**தலைப்பு 149 – கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 149 - கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 12 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 5,485.69 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 4,105.67 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,380.02 மில்லியன் அதாவது 25.16 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,804.16 | 1,691.16 | 113.00 | 6.26 |
| மூலதனம் | 3,681.53 | 2,414.51 | 1,267.02 | 34.42 |
| மொத்தம் | 5,485.69 | 4,105.67 | 1,380.02 | 25.16 |

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 14901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 16.00 | 14.04 | 9.50 | 17.19 | 80.00 | 46.66 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53.11 மில்லியனாக இருந்தது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0066/000 | 0.08 |
| 6000/0000/00/0013/0031/000 | 5.76 |

| | |
|---|---|
| 6000/0000/00/0016/0018/000 | 44.87 |
| 6000/0000/00/0018/0022/000 | 2.40 |
| | -------- |
| | 53.11 |
| மொத்தம் | ==== |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (ii) | அடியிதழ்சேர் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 16 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 223.60 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 41 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புக்கள் அச் செலவின விடயங்களுக்கான தேறிய ஏற்பாட்டில் 25 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

14901 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட

மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த 6 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இருந்து வரும் மீதி ரூபா 100,208 ஆக இருந்தது.

### 3.4 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

அமைச்சினால் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 07 கைத்தொழில் கிராமங்களை நிர்மாணங்களுக்காக ரூபா 102.71 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக (mobilization) செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் போதியளவு பௌதீக செயல் முன்னேற்றம் அடையப் பெற்றிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

2015 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 கைத்தொழில் கிராமங்களை நிர்மாணிப்பதற்காகவும் சேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் ரூபா 153.3 மில்லியனான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 74 | 62 | 17 | 05 |
| மூன்றாம் நிலை | 08 | 04 | 04 | - |
| இரண்டாம் நிலை | 686 | 529 | 157 | - |
| ஆரம்ப நிலை | 141 | 118 | 23 | |
| மொத்தம் | 909 | 713 | 201 | 05 |